செ.வெ.எண்.343/2009/செமதொஅ நாள்:10.10.2009

**திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் 238 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டடம், ஊராட்சி மன்ற கட்டடம் மற்றும் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு அங்கன்வாடி கட்டிடம் ரூ.6.00 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம்ட ஆகியவற்றை திறந்து வைத்து, 238 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பினை வழங்கி பேசியதாவது,

தண்டலம் ஊராட்சியில் புதிய கட்டடங்களை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தேர்தல் அறிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. சுமார் கடந்த 3¼ ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் வளர்ச்சி திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ரூ.20 லட்சம் வழங்கப்பட உள்ளது. அந்த திட்டத்தின் மூலம் இந்த ஊராட்சியில் அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றப்பட்டு தன்னிறைவு பெறும். திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

விழாவில் காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம் தலைமையுரையாற்றினார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.வனமயில் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முன்னதாக தண்டலம் ஊராட்சி தலைவர் திருமதி.சிவகாமி வெங்கடேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திரு.ஏ.மோகனன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் தனித்துணை ஆட்சியர் திரு.சி.முனுசாமி, வட்டாட்சியர் திரு.இரா.கந்தசாமி, வட்ட வழங்கல் அலுவலர் திரு.எஸ்.தனலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நா.சுரேஷ்குமார், திரு.பிரான்சிஸ் மைக்கேல், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.நிக்கோலஸ், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.எம்.வேலு, திரு.வெங்கடாசலம் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.